# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.14578/F/2024**

திரு D.K. சையத் அஷ்ரப் அலி -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை - 600 001. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 18.03.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 25.04.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.11.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு D.K. சையத் அஷ்ரப் அலி என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ஜனாப் S. சையத் ஜாபீர், கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தமிழ்நாடு வக்ஃப் வாரிய தீர்மானம் இனம் எண்.275/23 R.c.No.733/2021/B4/KPM & 10287/04/B4/KPM நாள் 15.02.2024-ன் நகலை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய அனைத்து தகவல்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அத்தகவல்களை பெற்றுக்கொண்ட மனுதாரர், அனைத்து தகவல்களும் பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக தனக்கு வழங்கப்பட்டுள்ளது என ஏற்பளிப்பு செய்த 28.03.2025 தேதியிட்ட அவரது எழுத்துப்பூர்வமான கடித நகலினையும் இவ்வாணையத்தின் பார்வைக்கும் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார். ஆணையம் அதனை பதிவு செய்து, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.14578/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை - 600 001.

**<u>வழக்கு எண்.SA.14578/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு D.K. சையத் அஷ்ரப் அலி, த/பெ. D.A. சையத் கலீமுல்லா,
மனை எண்.28, வள்ளல் யூசுப் நகர் 4வது தெரு,
சேலையூர் (அஞ்சல்), சென்னை - 600 073.

Copy to: File
SNPS / 03.04.2025